Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 5/2026**

**வழக்கு சாட்சி எண். PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேலாயுதம் | கிராமம் | : | தீர்த்தமலை |
| தந்தை பெயர் | : | குப்பன் | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 86 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். ).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **26th** Day of **March 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது தீர்த்தமலையில் வசித்து வருகிறேன். கடந்த 28.12.2025ம் வருடம் நான் எனது வீட்டில் உறவினருடன் தூங்கி கொண்டிருந்தபோது இயற்கை உபாதை கழிக்க இரவு சுமார் 10 மணியளவில் வீட்டின் கதவை திறந்து வெளியே வந்தேன். நான் கையில் டார்ச் லைட் எடுத்துக்கொண்டு வெளியில் வந்து தோட்டத்தையும் மாட்டு தொழுவத்தையும் டார்ச் லைட் வெளிச்சத்தில் பார்த்துவிட்டு வீட்டிற்குள் செல்வதற்காக வாசல் படி அருகில் வந்தபோது (சாட்சி ஆஜர் எதிரியை செய்கையால் அடையாளம் காட்டி அந்த நபர் திடிரென எனது வாயை பொத்தி)

என்றும் எதிரி கையை பிடித்து இழுத்து வீட்டிற்குள் தள்ளிவிட்டு வீட்டின் கதவை உள்பக்கமாக தாழிட்டுவிட்டார். பின்னர் நான் கையில் அணிந்திருந்த மோதிரத்தை வலுக்கட்டாயமாக கழட்ட முற்பட்டார். மோதிரத்தை கழட்ட முடியவில்லை. சத்தம் கேட்டு அருகில் படுத்திருந்த எனது மனைவி மீனா பயந்து கூச்சலிட்டார். உடனே எதிரிகள் ஆஜர் எதிரியும் மற்றொரு நபரும் எனது மனைவியை வாய் பொத்தி கையால் முகத்தில் இடித்தார்கள். மேலும் எனது மனைவி அணிந்திருந்த 5 பவுன் தங்க தாலி செயின் மற்றும் தங்க காசு 5 மொத்தம் 1 1/2 பவுன் ஆகியவற்றை பறித்துகொண்டார்கள். ஆஜர் எதிரியும் மற்றொரு நபரும் நகைகளை பறித்துக்கொண்டு கதவை திறந்து வெளியே ஓடினார்கள். நான் பின்னாலே அவர்களை துரத்தி பிடிக்கமுற்பட்டேன். ஆனால் வெளியில் நிறுத்தியிருந்த பைக்கில் ஒரு நபர் பைக்கை ஆன் செய்து கொண்டு எதிரிகள் வருவதை பார்த்து கொண்டு தயாராக இருந்தார். எதிரிகள் அந்த பைக்கில் ஏறியவுடன் மூன்று நபர்களும் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்கள். நான் உடனே சம்பவம் குறித்து எனது தம்பி மகன் சதிஷ் போன்மூலம் தகவல் தெரிவித்தேன். சம்பவம் தெரிந்து அருகில் இருந்த நபர்கள் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். பின்னர் சம்பவம் குறித்து நான் கோட்டப்பட்டி காவல் நிலைய போலீசாரிடம் 28.12.2025ம் தேதி புகார் கொடுத்தேன்.

இன்று என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகார் அசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் திருடு போன எனது நகை கிடைத்துவிட்டதாக போலீசார் எனக்கு தகவல் தெரிவித்தார்கள். நான் காவல் நிலையம் சென்று நகைகளை அடையாளம் பார்த்தபோது திருடுபோன தங்க காசு கிடைத்துவிட்டதாகவும் செயின்

கிடைக்கவில்லை எனவும் கூறினார்கள். பின்னர் நான் எனது நகைகளை போலீசாரிடம் அடையாளம் காட்டினேன். இன்று என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள தங்க காசுகள் தான் அன்றைய தினம் திருடுபோனவையாகும். புகைப்படத்தில் உள்ள தங்க காசுகள் அசாபொ.1 (5 காசுகள்) ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் எதிரி நகைகளை விற்று மீதி உள்ள பணத்தை பணம் ரூ. 35000/- மற்றும் நகைகளை இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றேன். வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(எதிரி தரப்பில் இருந்து இலவச சட்ட உதவிகள் மூலம் நியமனம் செய்யப்பட்ட வழக்கறிஞர் திரு. K.குமரவேல் என்பவர் ஆஜர் ஆகாத படியாலும் அவரது தொலைபேசி எண்ணான 9488390921 என்ற எண்ணிற்கு நீதிமன்றத்திலிருந்து தொலைபேசியிலிருந்து தொடர்பு கொண்டு அழைப்பை எடுக்காததாலும், நீதிமன்றத்தால் நியமனம் செய்யப்படவிருந்த Amicus curiae யை எதிரி மறுத்துவிட்டதாலும் சாட்சியின் வயது மூப்பின் காரணமாகவும் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தேதி ஒத்திவைக்கப்படாமல் முடித்து வைக்கப்படுகிறது.)

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**